# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

### Sessions Case No. 25/2022

| | |
|---|---|
| Deposition of witness for | : PW16 |
| Name | : Dr. அருள்செல்வன் |
| Father's / Husband Name | : மா. சுப்பிரமணியம் |
| Village | : கன்னங்குறிச்சி |
| Taluk | : சேலம் |
| Calling | : மருத்துவர் |
| Age | : 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 15th day of April 2025.

<u>15-04-2025</u>

**A1 to A5 present. A6 absent petition filed and allowed.**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது சேலம், அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனை மருத்துவக் கல்லூரியில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.03.2021 அன்று அதே மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் நான் பணியில் இருந்த போது சங்ககிரி காவல் நிலைய குற்ற எண். 105/2021 வழக்கில் சம்மந்தப்பட்ட சேகர்(எ) ராமசாமி, த/பெ. நாச்சிமுத்து என்ற சமார் 44 வயது மதிக்கத்தக்க ஆண் பிரேதத்தை, பிரேத பரிசோதனை செய்ய வேண்டி, கொங்கணாபுரம் காவல் நிலைய காவல்

ஆய்வாளர், பொறுப்பு சங்ககிரி காவல் நிலையம் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தையும், பிரேதத்தையும் நிலைய முதல் நிலை காவலர் 1896 சேகர் என்னிடம் சமர்பித்தார்.

அன்றே மதியம் 3.40 மணியளவில் பிரேத பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டது. பிரேதத்தின் உடற்முழுவதும் விறைப்பு தன்மை காணப்பட்டது. வெளிப்புற பிரேத பரிசோதனையில் கீழ்வரும் இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் காணப்பட்டது.

1) வலது கண் புருவத்தில் கிழிந்த காயம் 4x3 செ.மீx எலும்பு ஆழம்

2) இடது கண் புருவத்தின் வெளிப்பகுதியில் கிழிந்த காயம் அளவு 1x1 செ.மீx எலும்பு ஆழம்.

3) வலது முழங்கையில் கிழிந்த காயம் அளவு 3x2 செ.மீx எலும்பு ஆழம்

4) வலது கையின் நடுவிரலில் கிழிந்த காயம் அளவு 3x2x1 செ.மீ

5) வலது கையின் மேல்புற நடுவிரலில் கிழிந்த காயம் அளவு 2x1x1 செ.மீ

6) வலது கையின் மோதிர விரலில் கிழிந்த காயம் 2x1x1 செ.மீ

7) வலது காலின் கீழ் பகுதியில் கிழிந்த காயம் அளவு 2x1x1 செ.மீ

8) வலது கனுக்காலின் முன்பகுதியில் கிழிந்த காயம் அளவு 3x2x1 செ.மீ

9) இடது முட்டியில் கிழிந்த காயம் அளவு 4x1x1 செ.மீ

10) இடது காலின் நடுப்பகுதியில் கிழிந்த காயம் அளவு 2x1x1 செ.மீ

11) நெஞ்சுப்பகுதியில் உடம்பின் நடுவிலிருந்து 3 செ.மீ தள்ளியும் காம்பிலிருந்து 5 செ.மீ கீழேயும் ஒரு கன்றிய காயம் அளவு 6x2x0.5 செ.மீ.

12) வலது தோல்பட்டையில் சிராய்ப்பு காயம் அளவு 0.5x0.5 செ.மீ

13) வலது நெற்றியில் சிராய்ப்பு காயம் அளவு 3x1 செ.மீ

14) வலது முட்டியில் சிராய்ப்பு காயம் அளவு 3x2 செ.மீ

15) வலது காலில் சிராய்ப்பு காயம் அளவு 3x1 செ.மீ

16) மேற்கூறிய காயத்திலிருந்து 1 செ.மீ கீழே சிராய்ப்பு காயம் அளவு 4x2 செ.மீ

17) மேற்சொன்ன காயத்திலிருந்து 2 செ.மீ கீழே சிராய்ப்பு காயம் அளவு 2x1 செ.மீ

18) இடது காலின் வெளிப்புறத்தில் சிராய்ப்பு காயம் அளவு 4x1 செ.மீ

19) மேற்சொன்ன காயத்திலிருந்து 1 செ.மீ கீழே சிராய்ப்பு காயம் அளவு 3x1 செ.மீ

20) வலது காலின் நடுவில் சிராய்ப்பு காயம் அளவு 5x2 செ.மீ

21) வலது காலின் கீழ்ப்பகுதியில் சிராய்ப்பு காயம் அளவு 2x1 செ.மீ

22) இடது தொடையின் வெளிப்புறத்தில் சிராய்ப்பு காயம் அளவு 5x2 செ.மீ

வலது புஜத்திலும், வலது முன்னங்கையிலும், வலது காலிலும் இறப்பிற்கு பின் ஏற்பட்ட எலும்பு கடி காணப்பட்டது.

உட்புற பிரேத பரிசோதனையில் தலைப்பகுதியில் இடது முன்பகுதி சதை கன்றிபோய் இருந்தது அளவு 6x3x0.5 செ.மீ. வலது முன் மற்றும் மேற்புற சதை கன்றியோப் இருந்தது அளவு 9x6x0.5 செ.மீ. மண்டை ஓட்டு பகுதி சாதாரண நிலையில் இருந்தது. மூளையின் வலது மற்றும் முன் மேற்பகுதி ரத்தம் வெளியேறி காணப்பட்டது. கபாலத்தின் அடிப்பகுதியில் வலது முன்புறத்தில் 5 செ.மீ அளவு உடைந்து காணப்பட்டது. கழுத்து பகுதியில் குரல் வளை எலும்பு சாதாரண நிலையில் இருந்தது.

நெஞ்சுப்பகுதியில் விலா எலும்புகளும், நுரையீரல்களும், இருதயமும் சாதாரண நிலையில் இருந்தது. வயிற்றுப் பகுதியின் இரைப்பையின் உள்ளே 90 கிராம் அளவு பாதி செறிக்கப்பட்ட உணவு எந்தவித வாடையும் இன்றி காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல் மற்றும் இரு சிறுநீரகங்கள் சாதாரண நிலையில் இருந்தது. வெட்டிப்பார்த்ததில் கன்றிபோய் இருந்தது. இடும்பெலும்பு, முதுகெலும்பு சாதாரண நிலையில் இருந்தது.

உட்புற உறுப்புகள் சேகரிக்கப்பட்டு இரசாயன பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இரத்த மாதிரி சேகரிக்கப்பட்டு, இரத்தத்தின் தன்மை தெரிய அனுப்பி வைக்கப்பட்டது. இறந்த நபர் பிரேத பரிசோதனைக்கு 24 மணி நேரத்திற்கு முன்னதாக இறந்திருக்க கூடும் என்று அறிக்கை அளித்து சான்று வழங்கினேன். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை சான்று **அ.த.சா.ஆ–P9** ஆகும்.

இரசாயன பரிசோதனை அறிக்கை பெறப்பட்டதில் அதன் உள்ளுறுப்புகளில் விஷமோ, சாராயமோ காணப்படவில்லை. அந்த இரசாயண பரிசோதனை அறிக்கை **அ.த.சா.ஆ–P10** ஆகும். அந்த அறிக்கையின்படி இறந்த நபர் தலையில் ஏற்பட்ட காயத்தினால் இறந்திருக்க கூடும் என்று எனது கருத்து தெரிவித்து இறுதி கருத்துரை அளித்தேன். அந்த இறுதி கருத்துரை **அ.த.சா.ஆ–P11** ஆகும். மருத்துவர் அருண் பிரபாகரன் என்பவர் பதிவு செய்த விபத்து பதிவேடு **அ.த.சா.ஆ–P12** ஆகும்.

மேற்சொன்ன இறந்த நபர் என்னிடம் காட்டப்படும் காற்றடிக்கும் பம்பினால் தாக்கினால் மேற்சொன்ன காயங்கள் ஏற்படும் என்றால் ஆமாம்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பிரேதம் பிரேத பரிசோதனைக்கு வரும் சமயத்தில் விறைப்பு தன்மையுடன் இருந்தது என்று நான் பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன். பிண விறைப்பு தன்மைக்கு பின்னிட்டு ரத்த கசிவு ஏற்பட வாய்ப்பில்லை. கண் புருவம், நெற்றி தவிர தலையில் வெளிப்புற காயம் இல்லை. மேற்கண்ட அடிப்பட்ட நபர் எவ்வளவு நேரத்தில் உயிர்ப்பிரியும் என்று அறுதியிட்டு கூறஇயலாது.

இறந்த நபர் ஓரளவு திடகாத்திரமான நபர் என்றால் ஆமாம். அந்த நபரை இரண்டு நபர்கள் தாக்கும் போது அவரால் திருப்பி தாக்க முடியும் என்றால் ஆமாம். பிரேதத்தில் அதிகப்படியான இரத்த போக்கு இருந்ததாக நான் பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் ஆமாம். காற்றடிக்கும் பம்பில் அடித்து தான் காயம் பட்ட நபருக்கு அத்தகைய காயங்கள் ஏற்பட்டது என்று அறுதியிட்டு கூற இயலாது என்றால் ஆமாம்.

பிரேதத்தின் உடம்பில் வேறு நபர்களின் ரத்த மாதிரிகள் எதுவும் கண்டறியப்படவில்லை. கருத்துரை அடிப்படையில் நான் வழங்கிய சாட்சியம் ஏற்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/– A.M. ரவி,<br>
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,<br>
சேலம்.